

# எமது தேசத்திற்கும் அதனது மக்களுக்கும் செழுமையைப் பெற்றுத்தர நாம் ஒரு பயணத்தில் இருக்கின்றோம். நீங்கள் அதனொரு பங்காளராக இருக்க விரும்புகிறீர்களா???

இலங்கையின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியானது நாடு முழுவதும் 272 கிளைகள் மற்றும் 3000 இற்கும் மேற்பட்ட திறமையான ஊழியர்களைக் கொண்டு செயற்படுகின்றது என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடத்திற்குத் தேவையான தகைமைகளுடன், சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட தொழில் வல்லுநர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பிரதான முகாமையாளர் – தகவல் கட்டமைப்பு கணக்காய்வு (Chief Manager- Information System Audit )

**முக்கிய தேவைகள்**

➢ அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்டுள்ள தகவல் தொழிநுட்பப் (IT) பட்டப்படிப்பு, அல்லது குறித்த துறைசார் பட்டப்படிப்பு மற்றும் ஆகக்குறைந்தது 07 வருட முன்னனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் 03 வருடகால மேற்பார்வையாளர் மட்டத்திலான அனுபவத்தினை தகவல் கட்டமைப்பு கணக்காய்வு துறையில் கொண்டிருத்தல் வேண்டும் (வங்கித்துறைசார்பில் எனில் விரும்பத்தக்கதாகும்).

**அல்லது**

➢ தகவல் தொழிநுட்பத் (IT) துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற முதுமாணி பட்டம்/ தகுதி மற்றும் 05 வருடகால அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அதில் 02 வருடகால மேற்பார்வையாளர் மட்டத்திலான அனுபவத்தினை தகவல் கட்டமைப்பு கணக்காய்வு துறையில் கொண்டிருத்தல் வேண்டும் (வங்கித்துறைசார்பில் எனில் விரும்பத்தக்கதாகும்).

- CISA, CISM தொழில்துறைசார் சான்றிதழைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் CCNA எனில் விரும்பத்தக்கதாகும்.
- ஸ்கிரிப்டிங் மொழியியல் தொடர்பில் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் சாதகமாகவிருக்கும்.
- சிறந்த எழுத்து மற்றும் வாய்மொழித் தொடர்பாடல் திறமை, முன்வைப்புத் திறமைகள், தகவல் தொழிநுட்பத் திறமைகள்
- தகவல் தொழிநுட்பச் செயற்பாட்டு நடைமுறைகள்/ தகவல் அமைப்புக்கள் மற்றும் தகவல் பாதுகாப்பு கட்டுப்பாடு குறித்த வலுவான அறிவு
- சிறந்த முகாமைத்துவத் திறன்கள் மற்றும் ஒத்துழைப்புத் திறன்களைக் கொண்டிருத்தல்
- 50 வயதிற்குக் குறைவானவராக இருத்தல் வேண்டும்.

**சம்பளம்/கொடுப்பனவுகள்**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு வங்கித் தொழிற் துறையில் நிலவும் தர நிர்ணயங்களுக்கு ஈடான ஏனைய அனுகூலங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

பூர்த்தி செய்யப்பட்ட உங்களது முழுமையான சுயவிபரக் கோவையை, உறவினரல்லாத சிபாரிசு செய்யும் இருவரின் தொடர்பு விபரங்களுடன் 2024 டிசெம்பர் 24ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய விடயத்தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு, careers@rdb.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிராத அல்லது பிழையான தகவல்களை கொண்டிருக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஆட்சேர்ப்பு படிமுறையின் எக்கட்டத்திலும் எவ்வித முன்னறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும். சிறுபட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைப்பதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கு அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்வதற்கு வங்கிக்கு முழுமையான அதிகாரம் உண்டு.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி.
இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.
0112 03 54 54 | www.rdb.lk